ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து ஆர்ப்பாட்டம்!

இந்திய அரசியலைமப்புச் சட்டத்தை வடிவமைத்த சட்ட மாமேதை, புரட்சியாளர் டாக்டர்.அம்பேத்கர் அவர்களை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களைக் கண்டித்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில் தலைமை தபால் நிலையம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்கம் முன்பு உள்ள டாக்டர். அம்பேத்கர் சிலையினை தண்ணீர் ஊற்றி கழுவி சுத்தம் செய்து (அவமானத்தை கழுவுவதன் குறியீடாக) மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம். இதில் மாவட்டக் கழக, ஒன்றியக் கழக, பேரூர் கழக, பகுதிக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் ஒன்றிய அரசின் சர்வாதிகாரப் போக்கையும் டாக்டர் அம்பேத்கர் அவர்களை அவமதித்த அமித்ஷாவை கண்டித்தும் உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பொன். முத்து ராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ. வேலுசாமி, உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ. குழந்தைவேலு ஆகியோர் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் கழக நிர்வாகிகள் மா. ஜெயராம், தனச்செல்வம், மா. ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன், வக்கீல் ராகவன், முருகவேல், அக்ரி கணேசன், சம்மட்டிபுரம் கணேசன், சுப்பிரமணியன், இளைஞர் அணி சௌந்தர்ராஜன் மற்றும் பொதுக்குழு மாவட்ட பகுதி கழக வட்டக் கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் அண்ணல் அம்பேத்கர் அவர்களை இழிவாக பேசிய ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து சங்கரன்கோவில் தபால் நிலையம் முன்பு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் முன்னாள் அமைச்சர் தங்கவேலு முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வில் சீனிவாசன்,பரமகுரு, செண்பக விநாயகம்,பத்மநாபன், சரவணன்,பிரகாஷ்,புனிதா, ராஜதுரை,மனோகரன், மகேஸ்வரி,வேல்சாமி பாண்டியன்,பராசக்தி,லாலா சங்கரபாண்டியன்,கடற்கரை, பூசை பாண்டியன்,பெரியதுரை, கிறிஸ்டோபர்,சேர்மதுரை, ராமச்சந்திரன்,பால்ராஜ், வெள்ளத்துரை,அந்தோணிசாமி, சிவசங்கரி,உமா மகேஸ்வரி முத்துக்குமார்,காவல்கிளி, மற்றும் சிபிஐ அந்தோணிச்சாமி, சிபிஎம் உச்சி மாகாளி,உள்பட கழகத்தினர் பலர் திரளாக கலந்து கொண்டனர்.

புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களை இழிவாக பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து உத்தமபாளையம் பைபாஸ் ரோட்டில் தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஒன்றிய செயலாளர்கள் நகர செயலாளர் பேரூர் செயல்கள் சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களை இழிவாக பேசிய ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் டவுண் சந்திப்பிள்ளையார் கோவில் பேருந்து நிறுத்தம் அருகில் மாநகர செயலாளர் சுப்பிரமணியன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.நிகழ்வில் அப்துல் கையூம்,சுப்பிரமணியன் நமச்சிவாயம்,அன்டன் செல்லதுரை,அலிஃப் மீரான், வேங்கை வெங்கடேஷ்,பத்மா, ராஜேஸ்வரி,சுப்பையா,நாதன், ஜாகிர் உசேன்,மைக்மணி உள்பட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர்கள் மத்திய சங்கத்தின் சார்பில்

ஒன்றிய அரசைக் கண்டித்துப் போராட்டம்!

பெரம்பலூரில் பொன்.குமார் அறிவிப்பு!

பெரம்பலூர், டிச.20-

ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடு கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர்கள் மத்திய சங்கத்தின் சார்பில் போராட்டம் நடத்த உள்ளதாக அதன் நிறுவனத் தலைவரும், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவருமான பொன். குமார் பெரம்பலூரில் தெரிவித்தார்!

தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் கட்சி மற்றும் தமிழக கட்டுமான அமைப்புச்சாரா தொழிலாளர்கள் மத்திய சங்கத்தின் சார்பில் உலக புலம்பெயர்வோர் தின நிகழ்ச்சி மற்றும் மாவட்ட பொதுக்குழு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றது.

அதன் அமைப்புச் செயலாளர் நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவர் பொன்.குமார், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பேசினர்.

அப்போது தமிழக அரசின் சார்பில், தொழிலாளர்களுக்கும் கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கும் நல வாரியம் ஏற்படுத்தி நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதையும், தமிழக அரசின் சாதனைகளையும் பட்டியலிட்டனர்.

அதனைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவர் பொன். குமார், தமிழகத்திலிருந்து பல்வேறு வெளிநாடுகளுக்கு ஏராளமான தொழிலாளர்களும், படித்த இளைஞர்களும் வேலைக்காக வேண்டி புலம் பெயர்ந்துள்ளனர். அவ்வாறு செல்பவர்களை அதன் ஏஜெண்டுகள் சுற்றுலா விசாவில் அழைத்துச் சென்று பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கி அவர்களை சிரமத்திற்கு ஆளாக்கி வருகின்றனர்.

மேலும் அவர்களுக்கு பேசப்பட்ட சம்பளத்தையும் கொடுப்பதில்லை, விசாவை வாங்கி வைத்துக் கொண்டு சொந்த ஊருக்கும் அனுப்பி வைப்பதில்லை. அதனால் அவர்களது குடும்பமும் பாதிக்கப்படுகிறது.

இதற்காக தமிழகத்தில் உள்ளதை போல வெளிநாடு வாழ் தொழிலாளர்களுக்கான நல வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த வாரியத்தின் மூலம் வெளிநாடுகளுக்கு சென்று பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு பல்வேறு விதமான உதவிகள் செய்யப்பட்டு வருகிறது. புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக டிசம்பர் 18 ஆம் தேதி உலக புலம்பெயர்வோர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதையே நாம் இன்று கொண்டாடி வருகிறோம்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் நமது நாட்டிற்கு பல லட்சம் கோடி அந்நிய செலாவணி வருமானம் வருகிறது. ஆனால் அவ்வாறு அந்நிய செலாவணியை பெற்றுத் தரும் தொழிலாளர்களுக்காகவும், அவர்களின் நலனுக்காகவும் 1983 &ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வெளிநாடு வாழ் தொழிலாளர்களுக்கான சட்டத்தில் பல்வேறு திருத்தங்களை கொண்டு வர உள்ளதாக ஒன்றிய அரசு கடந்த 10 ஆண்டுகளாக கூறி வருகிறார்கள். ஆனால் அதனை அவர்கள் செயல்படுத்தவில்லை. எனவே இதனைக் கண்டித்து விரைவில் மிகப் பெரிய அளவில் தமிழ்நாடு கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர்கள் மத்திய சங்கம் மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் சார்பில் போராட்டம் நடத்த உள்ளோம் என்று தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 18.12.2024 அன்று தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் அமைப்பு சார் தொழிலாளர்களின் குடும்பத்தினர்கள் மற்றும் பொது மக்களின் பயன்பாட்டிற்காக ரூபாய் 1.82 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட திரு.வி.க. தொழிலாளர் ஓய்வு இல்லத்தினை தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வெ. கணேசன் துவக்கிவைத்து தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய தொழிலாளர்கள் மற்றும் குடும்பத்தைச் சார்ந்த பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசு செயலாளர் வீரராக ராவ்,மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குனர் விஷ்ணு சந்திரன்,சட்டமன்ற உறுப்பினர்கள் பழனி நாடார், ராஜா,சதன் திருமலை குமார் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் உட்பட பலர் உள்ளனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் இனமான பேராசிரியர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.

டிசம்பர்-19 & 20
பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள
ஈரோடு வருகை தரும்
கலைஞரின் புதல்வரே
மக்களின் முதல்வரே
திராவிட மாடல் ஆட்சியின் அரசே
திக்கெட்டும் ஒலிக்கும் சமூகநீதி முரசே
வருக! வருக!! ஈரோட்டு குருகுலம்
உங்களை அன்போடு வரவேற்கிறது

மகிழ்வுடன் வரவேற்கும்
மாண்புமிகு சு.முத்துசாமி MA.,
மாவட்ட கழக செயலாளர்
வீட்டு வசதி நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர்
ஜெ.திருவாசகம் ME,MBA.,
மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்
ஈரோடு தெற்கு மாவட்ட திமுக